**செய்தி வெளியீடு எண் : 210** **நாள்: 05.02.2022**

## தெலங்கானா மாநிலத்தில் நடைபெறும் இராமானுஜரின் பொற்சிலைத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், திரு. த்ரிதண்டி சின்ன ஸ்ரீமன் நாராயண ராமானுஜ ஜீயர் அவர்கள் சந்தித்து, தெலுங்கானா மாநிலத்தில் நடைபெறவுள்ள இராமானுஜரின் பொற்சிலைத் திறப்பு விழாவிற்கான அழைப்பு விடுத்திருந்தார்.

இதனையடுத்து, இராமானுஜரின் பொற்சிலைத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திரு. த்ரிதண்டி சின்ன ஸ்ரீமன் நாராயண ராமானுஜ ஜீயர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து எழுதிய கடிதத்தின் விவரம்:

I respectfully thank you for inviting me for the consecration of the Golden Ramanuja. On this noble occasion, I wish that Ramanujar’s voice of Equality spreads across the country elegantly and emphatically. This symbol of “Statue of Equality” is the need of the hour for the inclusive and progressive development of the Nation as a whole!

It is my duty to highlight that it is our Leader Muthamizharignar Dr. Kalaignar who all along tirelessly fought for Equality both as the Chief Minister of Tamilnadu and as the Leader of the Dravida Munnetra Kazhagam. He had brought out the essence of Ramanujar's life by scripting the tele-serial on the seer's life and times. It was also the last of his literary and theatrical works, but that is living and will live on to take the life and works of the Great Social Reformer to future generations too - especially among the young masses of our Country.

I take this opportunity to inform you, further that the DMK Government in Tamil Nadu follows in the footsteps of Kalaignar. The social reforms advocated by Ramanujar are close to our hearts too. In one of our reformist approaches, my government appointed archakas in temples from all castes and ensured equality for all in performing poojas in the sanctum sanctorum of the temples in Tamil Nadu.

In the last eight months that we have been in office, my government have ensured that the temple administration in the State is streamlined and been allocating necessary funds across the State for the proper and effective management of temples - duly taking care of the welfare of all priests in temples. It is the HR&CE Department which implemented numerous schemes and welfare measures that benefited priests and devotees. Today, Tamil Nadu is having one of the best temple administrations among the states in the Country.

I whole heartedly wish the function a grand success and this "Statue of Equality" remain as the Symbol of National Integration.

இராமானுஜரின் பொற்சிலைத் திறப்பு நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்காக எனது மரியாதை கலந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இந்தச் சீரிய தருணத்தில், இராமானுஜர் அவர்களின் சமத்துவக் குரல் நாடெங்கும் சிறப்போடும் எழுச்சியோடும் ஒலிக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமத்துவத்தின் சிலை என்னும் இந்த அடையாளம், அனைவரையும் உள்ளடக்கி ஒட்டுமொத்தமாக நம் நாடு வளர்ச்சி பெறத் தற்போது மிகவும் தேவைப்படும் ஒன்றாகும்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் தன் வாழ்நாளெல்லாம் சமத்துவத்துக்காகப் பாடுபட்டவர் எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்று சுட்டிக்காட்டுவது எனது கடமையாகும். ராமானுஜரது வாழ்க்கையின் சாரத்தை எடுத்து சொல்லும் வகையில் அவர் ஒரு தொலைக்காட்சித் தொடருக்குக் கதை, வசனம் எழுதினார். அவரது இலக்கிய - திரைப் படைப்புகளில் இதுவே இறுதியானதாகும். அதே நேரத்தில் எந்நாளும் உயிர்ப்புடன் இருந்து அடுத்து வரும் தலைமுறைகளிடம், குறிப்பாக நம் நாட்டின் இளைஞர் திரளிடம் இராமானுஜர் என்னும் மாபெரும் சமூகச் சீர்திருத்தவாதியின் வாழ்வையும் பணிகளையும் கொண்டு செல்லும் படைப்பாக அது அமைந்திருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றித்தான் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு தற்போது நடைபெற்று வருகிறது என்பதனையும் நான் இத்தருணத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இராமானுஜர் பரப்பிய சீர்திருத்தங்கள் எங்களது நெஞ்சுக்கும் நெருக்கமானவைதாம். அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான், அனைத்துச் சாதிகளைச்

சேர்ந்தவர்களையும் அர்ச்சகர்களாக எனது அரசு நியமித்து, தமிழ்நாட்டுக் கோயில்களின் கருவறையில் பூசை செய்வதில் சமத்துவத்தை உறுதிசெய்துள்ளது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த எட்டு மாதங்களில், மாநிலத்தில் கோயில்களின் நிர்வாகம் முறையாக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள கோயில்களின் சிறப்பான நிர்வாகத்துக்குத் தேவையான நிதியினை ஒதுக்கியிருப்பதோடு - கோயில் பூசாரிகளின் நலன்களையும் காத்து வருகிறோம். இந்து சமய மற்றும் அறநிலையத் துறையில்தான் பக்தர்களும் அர்ச்சகர்களும் பயன்பெறும் எண்ணற்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது நாட்டிலேயே மிகச் சிறப்பான கோயில் நிர்வாகத்தினைக் கொண்ட மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

தங்களது நிகழ்வு பெரும் வெற்றியடைய எனது மனப்பூர்வமான வாழ்த்துகளையும் இராமானுஜரின் "சமத்துவ சிலையானது" என்ற இந்த அடையாளம் தேச ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ வேண்டும் என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**